# தஃவதே இஸ்லாமி தினம்

(Tamil)



Dawat-e-Islami DAY 2nd September

# தஃவதே இஸ்லாமி தினம்

**தூயவனான அல்லாஹ் கூறுகிறான்:**

وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ ؕ وَاُولٰٓىِٕكَ هُمُ الْمُفْلِحُوْنَ ﴿۱۰۴﴾

(پ۴، اٰلِ عمرٰن: ۱۰۴)

**கன்ஸுல் ஈமான் தர்ஜுமா:** மேலும், உங்களில் ஒரு கூட்டம் இவ்வாறு இருக்க வேண்டும், அவர்கள் நன்மையின் பால் அழைக்க வேண்டும், நல்ல விடயங்களையே ஏவ வேண்டும், இன்னும் தீயவற்றிலிருந்து தடுக்க வேண்டும், இவர்கள் தான் இலக்கை அடைவார்கள். *(பாகம்–4, ஆல இம்ரான்–104)*

## தஃவதே இஸ்லாமியின் தொடக்கம் மற்றும் வளர்ச்சி:

மேற்கோள் காட்டிய வசனத்தின் மீது பேணுதல் கொண்டு, இறைத்தூதரின் அன்பர்களின் மார்க்க அமைப்பான தஃவதே இஸ்லாமியை, சர்வதேச இஸ்லாமிய அறிஞர் ஷேகே தரீகத், அமீரே அஹ்லெ ஸுன்னத் ஹழ்ரத் அல்லாமா மௌலானா முஹம்மத் இல்யாஸ் அத்தாரி காதிரி ரZஸவி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள், துல் கஃதா மாதம், ஹிஜ்ரி 1401 அதன் பிரகாரம் செப்டம்பர் மாதம் 1981 இல் கராச்சி நகரில் தனது சில நண்பர்களுடன் சேர்ந்து தொடங்கி வைத்தார்கள். தஃவதே இஸ்லாமி அரசியல், போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றிலிருந்து விலகி, உறுதியான, நேர்மறையான முறையில், தூயவனான அல்லாஹ்வின் அருளாலும், கருணையாலும், தூய மார்க்க நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியது. இந்த அமைப்பின் ஒன்றிணைந்த வலுவான கவனம் அல்லாஹ்வின் அருளால், தூய மார்க்க பணிகளின் மீதே இருந்தது. பாகிஸ்தான் அளவிற்கு மட்டுமல்லாமல், குறுகிய காலத்தில் இந்த புனித பணியின் ஆன்மீகம் எல்லைகளைக் கடந்து, உலகம் முழுவதும் பரவியது. இன்னும் இந்த அமைப்பு, தனது உன்னத நோக்கங்களை அடைவதற்காக, 80 க்கும் மேற்பட்ட துறைகளின் கீழ் 313 க்கும் மேற்பட்ட உட்பிரிவுகளை நிறுவியுள்ளது.

### தலைமை மற்றும் மத்திய ஆலோசனை குழு:

அமீரே அஹ்லெ ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களுடைய வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன், உடலில் உள்ள இதயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவமும் அங்கீகாரமும் உள்ளதோ அதே அளவு தஃவதே இஸ்லாமியின் மத்திய ஆலோசனை குழு எனும் மத்திய சபைக்கு முக்கியத்துவமும் அங்கீகாரமும் உண்டு. இந்த மத்திய ஆலோசனை குழு தஃவதே

இஸ்லாமியின் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வரும் மதனி பணிகளை கவனித்துக் கொள்வது மட்டுமல்லாமல், அவற்றின் செயல்திறனை அதிகரிப்பது மற்றும் இயக்கத்தை சிறப்பாக நிர்வகித்து அதை மேம்படுத்துவது குறித்தும் தொடர் சிந்தனையையும் முயற்சியையும் மேற்கொண்டு வருகிறது. அமீரே அஹ்லெ ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள் இந்த சபையின் மீது மட்டில்லா அன்பும் ஈடுபாடும் கொண்டு சிறந்த வழிகாட்டுதலையும் வழங்குவதோடு, அதைக் கவனமாக மேற்பார்வையிட்டு தஃவதே இஸ்லாமியின் பூரண அமைப்பின் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் பாடுபடுகிறார்கள்.

## மார்க்க மற்றும் கல்வியின் முயற்சிகள்:

தஃவதே இஸ்லாமி சந்தேகத்திற்கு இடமின்றி, ஆயிரக்கணக்கான மஸ்ஜித்களை மிகுந்த முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் நிறுவியுள்ளது. மேலும் இந்த ஆன்மீக மற்றும் புனித இடங்களை ஆதரித்து பராமரிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்த விடயம் இத்துடன் முடிவடையவில்லை, மாறாக புனித குர்ஆனின் உண்மையான ஆன்மாவையும் மார்க்க உணர்வையும் ஊக்குவிக்கும் ‘மத்ரஸதுல் மதீனா’ மற்றும் ‘ஜாமிஅதுல் மதீனா’ போன்ற கல்வி நிறுவனங்களை நிறுவி கல்வி அறிவின் தீபங்களை மிளிரச் செய்துக் கொண்டிருக்கிறது. மேலும், ஒரு மகத்தான முன்னோக்குடன், ஆயிரக்கணக்கான திருக்குர்ஆனை ஓதுபவர்கள், அதை மனனம் செய்து தங்கள் இதயங்களில் பத்திரமாக பதித்து வைத்திருக்கும் இமாம்கள், பிரசங்கம் செய்பவர்கள், மார்க்க அறிஞர்கள், முஃப்திகள் ஆகியோரின் வாழ்க்கையை மேம்படுத்தும் பெரும் பணியின் மிகச்சிறந்த முன்முயற்சியை தஃவதே இஸ்லாமி எடுத்துள்ளது. மேலும் தனது உயர்ந்த பண்புடன் உம்மத்தின் சமூக சீர்திருத்தத்திற்காக பாடுபடுகிறது.

5 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள், தன்னார்வலர்கள் (Volunteers), 46,000 க்கும் மேற்பட்ட ஊதியம் பெறுபவர்கள் மற்றும் கோடிக் கணக்கான மார்க்க ஈர்ப்பு கொண்ட அடியார்கள் தஃவதே இஸ்லாமியின் பல்வேறு மார்க்க பணிகளில் பிரகாசமான நட்சத்திரங்களின் தொகுப்பைப் போல் ஈடுபட்டுள்ளதைக் காண்கிறோம். மேலும் அதன் மூலம் வழங்கப்பட்ட மிக முக்கியமான மதனி நோக்கம் (நம்முடைய மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களுடைய சீர்திருத்தத்தின் முயற்சி) ஐ பூர்த்தியாக்க பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## தாருல் இஃப்தா அஹ்லெ ஸுன்னத்:

மார்க்க வழிகாட்டுதலின் சிறப்பான மற்றும் மிக முக்கியமான துறையில், தஃவதே இஸ்லாமி ‘தாருல் இஃப்தா அஹ்லெ ஸுன்னத்’ கிளைகளை உலகின் பல்வேறு இடங்களிலும் நிறுவியுள்ளது. இந்த ஃபிக்ஹ் மற்றும் ஷரீஆ மையங்களில், தஃவதே இஸ்லாமியுடன் தொடர்புடைய மற்றும் பயிற்சி பெற்ற அறிஞர்கள் எழுத்து, வாய்மொழி, கைப்பேசி, மின்னஞ்சல், வாட்ஸ்அப் போன்றவற்றின் மூலமாக ஷரீஅத்தின் வழிகாட்டுதலை வழங்குவதில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

### இஸ்லாமிய ஆராய்ச்சி மற்றும் பதிப்பக நிறுவனம்:

மகத்தான கல்வி அறிவை மேம்படுத்துவதற்காக, ‘அல் மதீனதுல் இல்மிய்யா’ (தஃவதே இஸ்லாமியின் ஆராய்ச்சி நிறுவனம்) ஒரு நீரூற்று போல் நிறுவப்பட்டுள்ளது. தஃவதே இஸ்லாமியின் துறையான அல் மதீனதுல் இல்மிய்யா (Islamic Research Center) வில் பல துணைத் துறைகளின் ஆதரவுடன், தஃப்ஸீர், ஹதீஸ், ஃபிக்ஹ், ஸீரத், மற்றும் ஊக்கமளிக்கும் தலைப்புகள் (Motivational Topics) மற்றும் நிறுவன ஒழுங்குமுறை பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கிய புத்தகங்கள் மற்றும் சிறுநூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. குறிப்பாக இத்துறையில் இமாம் அஹ்மத் ரZஸா கான் رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்களின் நூல்களில் பல்வேறு பணிகள் செய்யப்படுவதோடு, அமீரே அஹ்லெ ஸுன்னத் دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَة அவர்களுடைய புத்தகங்கள் மற்றும் சிறுநூல்களுக்கான அத்தியாவசிய உள்ளடக்க விடயங்கள் போன்றவற்றை பெறுவதற்கும் உதவி வழங்கப்படுகிறது. இந்த புத்தகங்கள் மற்றும் சிறுநூல்கள் தஃவதே இஸ்லாமியின் ‘மக்தபதுல் மதீனா’ எனும் பதிப்பகத்தால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. இணையத்தின் நவீன வழிமுறைகளை பின்பற்றி, தஃவதே இஸ்லாமியின் www.dawateislami.net எனும் இணையதளத்தின் மூலமும், பல்வேறு மொழிகளில், நன்மையின் பால் அழைப்பு வழங்கப்படுகிறது.

### மொழிபெயர்ப்புத் துறை:

அல்லாஹ்வின் அருளாலும், கருணையாலும், தஃவதே இஸ்லாமியின் இந்தத் துறை உலகம் முழுவதும் 46 மொழிகளில் மார்க்க இலக்கியங்களை மொழிபெயர்த்து வருகிறது. இந்தத் துறை இதுவரை மொத்தம் 7000 க்கும் மேற்பட்ட திட்டங்களை நிறைவு செய்துள்ளது. மற்றும் அவற்றில் பெரும்பாலானவை முஸ்லிம்களை நேர் வழிநடத்தும் நோக்கத்துடன் தஃவதே இஸ்லாமியின் அதிகாரப்பூர்வமான இணையதளத்தில் கிடைக்கின்றன. மேலும், அல்லாஹ்வின் அருளாலும், கருணையாலும், இமாம் அஹ்மத் ரZஸா கான் رَحْمَةُ اللّٰهِ عَلَيْه அவர்களுடைய மிகவும் பிரபல்யமான “கன்ஸுல் ஈமான்” மொழி பெயர்ப்பை, முஃப்தி அப்துல் நபி ஹமீதீ சாஹிப் مدظله العالی அவர்கள் ஆங்கில மொழியிலும் மேலும் குர்ஆனின் அடிக்குறிப்புகளுடன் “கன்ஸுல் இர்ஃபான் மஅ ஹாஷியா இஃப்ஹாமுல் குர்ஆன்” ஆங்கிலம் மற்றும் சிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, தஃவதே இஸ்லாமியின் பதிப்பகமான மக்தபதுல் மதீனா மூலம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

### ஆன்லைன் மூலம் தொடர்பு மற்றும் தஃவதே இஸ்லாமியின் கல்வி:

ஆன்லைன் மூலம் நன்மையின் செய்தியை மக்களுக்கு பரப்புவதற்காக, தஃவதே இஸ்லாமி தனது இணையதளமான www.dawateislami.net மூலம் “ஃபைஸானெ ஆன்லைன் அகாடமி” (சிறுவர்கள், பெண்கள்) நிறுவி இருக்கிறது. அதன் உதவியுடன் ஆலிம் பாடநெறி, புனித குர்ஆன் (மனப்பாடம் மற்றும் பார்த்து ஓதுதல்) பயில்விக்கப்படுகிறது. 30 க்கும் மேலான பாடநெறிகள் (உதாரணத்திற்கு ‘பைZஸானெ நமாZஸ்’, ‘பைZஸானெ குர்ஆன் மற்றும் ஹதீஸ்’, ‘ஸீரத்தே முஸ்தஃபா’, ‘அகீதா மற்றும் ஃபிக்ஹ்’, ‘நிகாஹ்’, ‘புதிய முஸ்லிம்

பாடநெறி' போன்றவை) மூலம் கல்வி அறிவின் ஒளியை அவர்களுடைய வீடுகளில் கொண்டு சேர்க்கப்படுகிறது.

## கல்வி முறை – தாருல் மதீனா:

கல்வித் தளத்தில், "தாருல் மதீனா" எனும் ஆங்கில வழி இஸ்லாமிய பள்ளிக்கல்வி முறை, ப்ரீ–பிரைமரி முதல் மெட்ரிக் வரை செயல்பட்டு வருகிறது. இந்த முறையை கல்லூரிக்கும், கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத்திற்கும் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் நடந்து வருகின்றன.

## தகவல் தொழில்நுட்பத் துறை:

புதுமையான தொழில்நுட்பத்தின் உணர்வோடு, தஃவதே இஸ்லாமி தன்னுடைய தகவல் தொழில்நுட்பத் துறையின் மூலம் நவீன தொழில்நுட்பத்துடன் இணக்கமாக இயங்குகிறது. தஃவதே இஸ்லாமி சமூக ஊடக தளங்களிலும் இஸ்லாமிய போதனைகளை பிரபலப்படுத்துவதோடு, உம்மத்தை சீர்திருத்தும் புனித பணியையும் செய்து வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறை இணையம் மற்றும் நவீன தொழில்நுட்பம் மூலம் இஸ்லாமிய கல்வி அறிவை பொதுமக்களுக்கு சுலபமாக கிடைக்கச் செய்துள்ளது. பாரம்பரியத்தின் முன்னேற்றத்திற்காக இந்த அழகான நவீன கண்டு பிடிப்பின் ஒருங்கிணைப்பான டிஜிட்டல் ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் தஃவதே இஸ்லாமிக்கு மாபெரும் வெற்றியைக் கொடுத்துள்ளது.

## ஊடகங்களின் உள்ளமை:

மாறிவரும் உலகில் ஊடகங்களின் பங்கு ஒரு யதார்த்தம் ஆகும். எனவே தஃவதே இஸ்லாமி தனது "மதனி சேனல்" மூலம் 7 முக்கிய செயற்கைக்கோள்களின் (Satellites) வாயிலாக உருது, ஆங்கிலம் மற்றும் பங்களா மொழிகளில் மார்க்கத்திற்கான சேவையை சிறப்பாகச் செய்து வருகிறது. சுமார் 450 மில்லியன் நேயர்களின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது.

## நலன் மற்றும் சமூக சேவைகளில் தஃவதே இஸ்லாமியின் பங்கு:

தஃவதே இஸ்லாமி, FGRF (Faizan e Global Relief Foundation) மூலம் நலன் மற்றும் சமூக சேவைகளை தைரியத்துடனும், விடாமுயற்சியுடனும் தொடர்ந்து வழங்கி வருகிறது. மற்றும் பெருமனார் صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்களின் துக்கத்தில் உழலும் உம்மத்தின் பிரச்சினைகளைத் தணிக்க ஊரடங்கு, வெள்ளம் போன்றவற்றில் 26 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை செய்தது. மேலும் அந்த நிலைமைகளில் தலசீமியா (Thalassemia) மற்றும் பொதுவாக ஏனைய நோயாளிகளுக்கு 53,000 இரத்தப் பைகள் (Blood Bags) சேகரித்து, இதுவரைக்கும் யாராலும் செய்யப்படாத சாதனையும் செய்தது. இன்னும் ரொக்கம், ரேஷன் மற்றும் பல வழிகளில், உம்மத்தின் நலனில் முன்னணி வகித்தது.

## தஃவதே இஸ்லாமியின் ஏனைய திட்டங்கள்:

தஃவதே இஸ்லாமியின் உம்மத்தின் சிந்தனைப்பற்றிய அக்கறை முன்பு இருந்ததைவிட பரந்ததாகவும், அதிகமாகவும் காணப்படுகிறது. இந்த போக்கைத் தொடர்ந்து, பசுமை உலகத் திட்டத்தின் கீழ் பசுமை பாகிஸ்தான் பிரச்சாரத்தில் இதுவரை இலட்சோப இலட்சக் கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இந்த பிரச்சாரத்தைத் தொடரும்போது, எங்கள் முழக்கம் யாதெனில், ‘‘மரக் கன்று நட வேண்டும் ஒரு மரத்தை உருவாக்க வேண்டும்.’’ என்பதாகும். ஊனமுற்ற குழந்தைகளின் மறுவாழ்வுக்காக, FRC (Faizan e Rehabilitation Centre) என்ற நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது. இது அனாதைகள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளின் வளர்ப்பு மற்றும் அவர்களுடைய நல்வாழ்வுக்கான உதவிகளை செய்வதற்கு பாடுபடுகிறது. இந்த விடயம் இத்தோடு முடிந்து விடவில்லை, மாறாக அன்புக்குரிய பெருமானார் கண்மணி நாயகம் صَلَّی اللّٰہ عَلَیۡہِ وَاٰلِہٖ وَسَلَّم அன்னவர்களின் இன்னல் படும் உம்மத்திற்கு சேவை செய்யும் மனப்பான்மையோடு, FGRF மிகவிரைவில் மதனி சுகாதார மையத்தை (Madani Health Care Centre) நிறுவ உள்ளது. அனாதைகள் மற்றும் ஏழைக் குழந்தைகளின் எதிர்கால நலனுக்காகவும், மார்க்க மற்றும் உலக விடயங்களின் பயிற்சிக்காகவும் ஒரு ‘‘மதனி இல்லம்’’ முதலில் கராச்சியிலும் பின்னர் படிப்படியாக பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுத்து மற்ற நகரங்களிலும், நாடுகளிலும் நிறுவப்பட உள்ளது. இது தவிர, ஆண்களையும் பெண்களையும் சுயமாக தொழில் செய்துக் கொள்ளும் திறமை கொண்டவர்களாக மாற்றுவதற்கான நிறுவனமும் மிகவிரைவில் நிறுவப்படும் اِنۡ شَآءَاللّٰہ.

அல்லாஹுதஆலா, தஃவதே இஸ்லாமிக்கு மேலும் வெற்றியையும், முன்னேற்றத்தையும் வழங்குவானாக ! اٰمین

